## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.22/2025** **நாள் :30.04.2025**

### சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிக்காக (CMRL)
### குடிநீர் விநியோகம் நிறுத்தம்

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) அண்ணா நகர் மண்டலம், கெல்லிஸ் பால்ஃபோர் சாலையில் பிரதான குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் மேற்கொள்வதால் 03.05.2025 **அன்று** காலை 08.00 **மணி முதல்** 04.05.2025 **அன்று இரவு** 08.00 **மணி வரை** (36 **மணி நேரம்**) கீழ்ப்பாக்கம் (TM1 & TM3 ) குடிநீர் பகிர்மான நிலையத்தின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மண்டலம்–4 (தண்டையார்பேட்டை), மண்டலம்–5 (இராயபுரம்), மண்டலம்–6 (திரு.வி.க நகர்), மண்டலம்–8 (அண்ணா நகர்) மற்றும் மண்டலம்–9 (தேனாம்பேட்டை) –க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம்–4<br>(தண்டையார்பேட்டை) | தண்டையார்பேட்டை |
| மண்டலம்–5<br>(இராயபுரம்) | புரசைவாக்கம், பெரியமேடு,<br>சௌகார்பேட்டை, எழும்பூர் ,<br>சிந்தாதிரிபேட்டை |

...2....

| | |
|---|---|
| மண்டலம்–6<br>(திரு.வி.க நகர்) | ஓட்டேரி, அயனாவரம் , பெரம்பூர், செம்பியம் |
| மண்டலம்– 8<br>(அண்ணா நகர்) | கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ் |
| மண்டலம்– 9<br>(தேனாம்பேட்டை) | திருவல்லிக்கேணி |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in